Kavignan

# கவிஞன் இதழ்


காலாண்டுக் கவிதையிதழ்

WWW.KAVIGNAN.COM

# 25

ஐப்பசி
கார்த்திகை
மார்கழி
2013





பிறப்பு 24.09.1930 இறப்பு 29.12.2013

திரு. ச. விக்னேஷ்வரன்

விலை.ரூ.60

Kavignan
# கவிஞன்

தோற்றம் : 27 பங்குனி 2010

கவி ஞன் 25

2013 ஐப்பசி - கார்த்திகை - மார்கழி

பிரதம ஆசிரியர் : சதாசிவம் மதன்

தொலைபேசி : 0094 3620328
0094 3650153

தபாலஞ்சல் : கூட்டுறவுக்கடை வீதி
புதுக்குடியிருப்பு.30158
மட்டக்களப்பு.
இலங்கை.

மின்னஞ்சல் : kavignan@live.com

இணையத்தளம் : www.kavignan.com

பிரதம ஆலோசனை
திரு.வே.தட்சணாமூர்த்தி
திரு.S.P.நாதன்

அட்டைப்பட வடிவமைப்பு
சதாசிவம் மதன்

## உள்ளே உள்ள படைப்பாளிகள்

- கா.சிவலிங்கம்
- க.தணிகாசலம்
- பொன்.ஸ்ரீவாமதேவன்
- தம்பிலுவில் ஜெகா
- கன்னிமுத்துவெல்லபதியான்
- கலைஞர்.மு.கருணாநிதி
- அக்கரைச்சக்தி
- குறிஞ்சிவாணன்
- முல்லை வீரக்குட்டி
- தம்பிலுவில் தயா
- தாமரைத்தீவான்
- ஸ்ரீராம் விக்னேஷ்
- எஸ் பி. நாதன்
- நிலாதமிழின்தாசன்
- நீலாபாலன்
- மு.முருகேஷ்
- அறிவுமதி
- கதிரவன்
- வில்லியம் ஏர்டினஸ்ட் ஹென்லி
- மகிந்தன்
- கல்லாறு சைத்தன்யா
- சாந்தி லோகேஸ்வரன்
- ரஜிதரன்

இலக்கிய ஆர்வலரா நீங்கள்.....? அப்படியானால் கவிஞன் தொடர்ச்சிக்கு நீங்களும் உதவலாம்.

எமது நன்றி என்றென்றும் இவர்களுக்கு....

இராஜாஜி இராஜகோபாலன். திரு. காசுபதி நடராசா. கவிஞர் செல்லிதாசன். திரு. த. இன்பராசா. திரு. கி. மகிந்தன். திரு. சௌந். லெனாட் லொறன்சோ. திரு. சி. புவனேந்திரன். திரு. சு. இளங்கீரன். கல்வியூர். விஜயபாரதி. திரு. த. காண்டீபன். திரு. சி. பிரபு

# உங்களுடன் ஒரு மனித்துளி...

வணக்கம்.

2013 ஆம் ஆண்டைக் கடந்து 2014 இல் காலடியெடுத்து வைக்கக் காத்திருக்கும் உங்கள் அனைவருக்கும் எனது புத்தாண்டு நல்வாழ்த்துக்களைக் கூறிக் கொள்வதில் மகிழ்ச்சி. இந்தப் புதிய ஆண்டு உங்களுக்கு சகல சௌபாக்கியங்களும் நிறைந்த ஆண்டாக மலரட்டும்.

ஈழத்துச் சிற்றிதழ் போக்கைப் பொறுத்தவரை கவிஞன் இருபத்தைந்தாவது இதழ் மூலமாக இன்னமும் உங்களுடன் உரையாடிக் கொண்டிருக்கிறேன் என்றவகையில் எனது மகிழ்ச்சிக்கு எல்லையில்லை. எனினும் அம் மகிழ்ச்சிக்குப்பின்னான மனக்கசப்புகளுக்கும் குறைவில்லை. அதையும் மீறிய கவிஞனின் வருகைக்கு நிச்சயமாக கவிஞன் வாசகர்களாகிய நீங்களே காரணம் என்பதையும் மறந்துவிட முடியாது. இதே ஆதரவையும் பங்களிப்பையும் எதிர்வரும் காலங்களிலும் கவிஞனுக்கு நீங்கள் வழங்குவீர்கள் என்ற நம்பிக்கையில் தொடர்ந்தும் வெற்றியுடன் நாம் முன்னோக்கிப் பயணிப்போம்.

தமிழின் கவிதை இலக்கிய ஓட்டத்தில் அண்மைக்காலத்தில் தன்னையும் இணைத்துக் கொண்ட வகைதான் ''புலம்பெயர்ந்தோர் கவிதை'' புலம்பெயர்ந்தோர் கவிதை என்பது ஈழத்திலிருந்து உள்நாட்டுப் போர் காரணமாக வெளிநாடுகளில் சென்று வாழும் ஈழக்கவிஞர்கள் தாங்கள் வாழும் இடங்களில் இலக்கிய அமைப்புகளை ஏற்படுத்திக் கொண்டு தங்களுடைய இடப்பெயர்ச்சி உணர்வுகளை, வாழ்நிலைகளைக் கவிதைகளாகப் படைத்துவருவதாகும். முற்றுமுழுதான அவர்களது உணர்வுகளைக் கூறக்கூடியதாக உள்ள சுதந்திர நிலைமை அவர்களது கவிதைகளுக்கு, ஈழத்திலிருந்து எழுதும் கவிஞர்களின் கவிதைகளில் இருந்து ஒரு மாறுபாட்டைக் காட்டிவிடுகின்றது எனலாம். அந்தவகையில் கவிஞன் புலம்பெயர் கவிஞர்களின் மனப்பதிவுகளுக்கும் தொடர்ந்து களம் அமைத்து எம் மண்ணுடனான அவர்களின் தொடரறா நிலையைப் பேண உதவும் என்ற உறுதியுடன் உங்களிட-மிருந்து விடைபெறும் நான்.... என்றென்றும் அன்புடன்

- மதன் -

(பிரதம ஆசிரியர் - கவிஞன்)








-கவிஞர்.கலாபூஷணம்.கா.சிவலிங்கம்-


# புலவர்மணி புகழ் வாழ்க

புலவர்மணி யாரென்று பகர்கின்றேன் கேளுங்கள்
பெரிய புகழ் மிக்கதொரு புகளேந்தியின் னிளைய
தம்பிதான். அன்னை தமிழ் ஈன்றெடுத்ததோரினிய
தம்பிதான் பெரியதம்பிப்பிள்ளை எனும் பெயருடையோன்

(வேறு)
ஆறுமுகம் ஈராறு தோளும் - வெற்றி
வேலுமுடை திருமுருக வேளும்
அருள் மழை பொழிந்து
வல்வினை களைந்து
கோயில் கொண்டேயமர்ந்து ஆளும்

மண்டூர் உவந்தளித்த முத்து - அவர்
தமிழ் கூறுந் நல்லுலகின் சொத்து
பூவுலகில் மொழிகள்
பலவிருந்து மவர்க்குச்
செந்தமிழ் மீதானதுவே பித்து

தமிழ்மீது மையல்மிக வுற்றார் - தேன்
தீந்தமிழைக் கசடு அறக் கற்றார்
கவிதை பல யார்த்துப்
புகழ்பூத்த செம்மல்
புலவர்மணி என்று பெயர் பெற்றார்

மாண்புறு நல்லாசானாயிருந்து- நன்கு
ஊட்டினார் தமிழமுது விருந்து
இலட்சியம் மறந்த
அலட்சிய நபர்க்கு
அருத்தினார் அறிவுரை மருந்து

*(வேறு)*

நண்டுரும் வாவியத னோரம் எழுந்தருளி
நீலமயில் மீதமர்ந்து
வண்டுரும் நறைகொண்ட மலர் மாலையினையே தன்
மார்பினிற் சூடி மகிழும்
மண்டூர் முருகனவன் புகழ்பாடி அவர்யாத்த
"மண்டூர்ப் பதிக" மதனைக்
கண்டூர் மகிழ்ந்தேற்றிப் புலவர் மணிக்கிட்டதுவே
கவயரசர் எனுந் நாமமே.

தீண்டாமையினை யொழிக்கத் தாளாண்மை கொண்டுமணி
தாழாது நெஞ்சிலுறுதி
பூண்டார். முனிவர் விபுலானந்தரின் "மீட்சிப்
பத்"தினைப் பாடியருள
மீண்டார் பிணியிலிருந் தேவிபுலானந்தருமே.
மனையாள் நோய் விலகி ஓட
ஆண்டாளுக் கருளீந்த பரந்தாமன் கீதையினை
ஆக்கினார் வெண்பாவிலே

"உள்ளதும் நல்லதும்" மற்றுயர் " பாலைக்கலி"யினையும்
உரைநடையி லுருவாக்கியே
உள்ளமதைத் தொடுகின்ற கட்டுரைகளாய்த் தந்து
உலவவிட்டார் தரணியில்
கள்ளமே எள்ளளவும் நெஞ்சிலில் லார் புகழோ
களங்கமே யின்றி உலகம்
உள்ளவரை எஞ்ஞான்றும் நீடித்து நிலை நின்று
ஓங்கியே வாழ்க! வாழ்க!!

*(வேறு)*

திக்கெட்டும் நற்புகழை நட்ட மணி – நறுந்
தேன் சொட்டும் பாபடைத்து விட்ட மணி – படு
துட்டர் மனங்களையும் தொட்ட மணி – மதி
கெட்டோர்க்குங் கல்வியமுதிட்ட மணி – எழில்
நட்டமிடும் நாமகள் கண் பட்ட மணி – வான்
திங்களனைய மனந் தங்க மணி – நிதம்
மங்காப் பெருமையுறு துங்கமணி – தன்
உயிரேசெந் தமிழென்ற வயிரமணி – நகை
தவழ முகங் காட்டுமொரு பவளமணி – பெரும்
மண்டூர் தமிழ்க் களித்த குன்றிமணி – இறை
பத்து மிகக் கொண்டரிய முத்துமணி – சிறு
எள்ளளவுங் கள்ளமிலா வெள்ளிமணி – அரும்
பெரியோர் நல்லுள்ளம் பிரியா மணி – தன்
என்பும் தமிழ்க்கென்ற அன்புமணி – பெயர்
நிலவப் பாயாத்த பெரும் புலவர்மணி – புகழ்
உடல் கொண்டு உலகில் நிதம் வாழ்க! வாழ்க!!

******

**“சாதாரண மொழியை விட, கவிதை மொழி அதிக பொருளை உணர்த்தும் ஆற்றல் வாய்ந்தது. அது நம் செவிக்கு இன்பம் தருகிறது, அதன் ஒலியினால் நாம் மகிழ்ச்சியும் கிளர்ச்சியும் அடைகிறோம், வசீகரிக்கப்படுகிறோம். எங்களுடைய புலன்களைக் கூர்மையடையச் செய்து, நாம் நேரில் காணாதவற்றையும் கற்பனையின் மூலம் காணவைக்கிறது. இத்தனைக்கும் மேலாக நம் மனங்களை ஆட்கொண்டு, எம்மைச் சிந்திக்கவும் உணரவும் வைக்கிறது.”**

**– ஹான்ஸ்பீ.கத்** (Hans P Guth)–




# கீதமும் கவிநயமும்

## ஆசிரியர் கீதம்


முத்து முத்தான சித்திரங்கள் – இலங்கை
முற்றத்தில் சிந்திய இரத்தினங்கள்
பற்றும் பாசமும் வைத்தவற்றை – நல்ல
பாதையில் சேர்க்கும் பணியெமதே

அன்னை மடியில் அரவணைத்த பிள்ளை
பள்ளிவரும் பிஞ்சிப் பாலகனாம் – அவன்
தன்னந் தனிமையைப் போக்கி உள்ளத்தில்
நம்பிக்கை அன்பையும் ஊட்டிடுவோம்
எண்ணும் எழுத்தும் உணர்த்திடுவோம் உள்ளத்
தேவைகள் அறிந்து பூர்த்தி செய்வோம் – அவன்
ஒழுங்குடன் ஒழுக்கமும் பேணி நல்ல
சிந்தனை ஆற்றலைத் தூண்டிடுவோம்

கற்பித்தல் கற்றல் நிகழ்த்திடவே – நல்ல
கட்டுப்பாட்டுடன் வகுப்பறையில் – தினம்
பெற்ற கடமையும் பேணி ஏற்றே – ஞாலம்
போற்றும் சமூகத்தை நாம் படைப்போம்

இயற்றியவர்: பொன்.ஸ்ரீவாமதேவன்

ஒக்டோபர் 05 'உலக ஆசிரியர் தினம் உலகளாவிய ரீதியில் பல்வேறு விதமாகக் கொண்டாடப்படுகின்றது. யுனெஸ்கோ (UNESCO) நிறுவனம் ஆசிரியரின் முக்கியத்துவத்தை உணர்த்தும் முகமாக, 'ஆசிரியரின் தன்மையினைக் கருத்திற்கொண்டு அங்கீகாரமளித்தல்' என்ற கூற்றுடன், பொதுக் கல்விக்காக அல்லது சிறப்புத் துறையொன்றுக்காக அவர்களினால் ஆற்றப்பட்டு வரும் பங்களிப்பினை மரியாதை செய்யும் முகமாக, இவ் உலக ஆசிரியர் தினத்தை அறிவித்து, வருடாந்தம் கொண்டாடப்பட்டும் வருகின்றது.



# சிறுவர் உரிமை

கால்கொலுசு ஓசையிட ஆட்டம் போடடி—எதிர்
காலத்தையே எண்ணி எண்ணி நடனம் ஆடடி
பால் மணக்கும் பிஞ்சுகள் நாம் பாட்டுப் பாடியே – இந்த
நாள் நமது என்று சொல்லிக் கூத்தும் ஆடடி

சிறுவர்கள் எம் உரிமைகளைக் காத்திடுவீரே – இந்த
தேசத்துக்கே எதிர்காலத் தலைவர் நாங்களே
அறுவடைக்கும் அத்திவார வித்துக்கள் நாமே – எங்கள்
அன்புடைய பெரியோரே ஏற்றுடுவீரே

கல்வி எங்கள் உடல் நிறைய வேண்டும் வேண்டுமே – உங்கள்
கடமை அது பெற்றோரே அறிந்திடுவீரே
துள்ளித்துள்ளி ஓடி விளையாட வேண்டுமே – நாங்கள்
துன்பச் சுமை தாங்காமல் வாழ வேண்டுமே

தெருவோரப் பிச்சைகளாய் அலையக் கூடாது – நாங்கள்
வீட்டடிமைக் கூலிகளாய் வாழக்கூடாது
கருவினிலே எங்கள் வாழ்வைக் கிள்ளக்கூடாது – உங்கள்
காமவெறி பிஞ்சுகளைக் கொல்லக்கூடாது.

பசியாலே நாங்கள் வாடித் துன்புறலாமோ – பெரும்
பட்டினிப்பேய் எமைப்பிடித்துக் கொன்றழிப்பதோ
யுத்தம் யுத்தம் என்று நாங்கள் மடிந்துபோவதோ —எம்மைப்
பத்திரமாய் பாதுகாத்தல் உங்கள் பொறுப்பல்லோ

**- கவிஞர்.க.தணிகாசலம் -**

# வாசிப்பை நேசி


பாசை வளராத பண்டைக் காலமதில்
ஓசையாலே செய்தி சொல்லி வாழ்ந்தனர்
கல்லில் எழுதி கருத்தைப் பகிர்ந்த வேடர்
புல்லில் குறித்துத் தகவல் தந்த சீனர்
களிமண் தட்டில் அட்சரமிட்ட கிரேக்கர்
அளித்த வாசிப்பை அவனி என்றும் அறியும்

ஏட்டினில் மொழிவளர்த்த எத்தனையோ இலக்கியங்கள்
பாட்டியின் பரம்பரையும் படித்ததெல்லாம் பாடல்கள்
மேற்கத்தோர் தந்த மேலான காகிதத்தால்
போற்றருங் காவியங்கள் புத்துயிர் பெற்றனவே
அறிவுப் பொக்கிசமாய் அறிஞர் எமக்களித்த
பறிபோகாப் பெட்டகமாய் பனுவல் வாழ்கிறது

மனிதன் அறிவுபெறும் மகத்தான வாசிப்பால்
புனித நூல்களை புவனத்தார் போற்றுகின்றார்
தேனீக்கள் தேடுகின்ற தேனுள்ள மலர்போல்
ஞானிகள் நாடுகின்றார் நல்லமுத நூல்களை
வாசிப்பின் அவசியத்தை வளமுள்ளோர் அறிவர்
யாசிப்பின் புத்தகங்கள் யாங்கணும் தேடியதை

ஐப்பசித் திங்களதை வாசிப்பு மதமென்றே
செப்பியோர் சிந்தையது தேடலை ஊக்குவிக்கும்
பத்திரிகை சஞ்சிகை பயனுள்ள நூல்களெல்லாம்
திக்குள்ள தகவல்களைத் திரட்டி எமக்களிக்கும்
கிடைக்கும் நேரமதில் வாசித்துப் பழகிவிட்டால்
படைப்பாக்கத் திறனும் பக்குவமாய் வளரும்

தம்பிலுவில் ஜெகா



# சிலை நிறுவும் பணி

எவருக்கும் தெரியாமல்
கொண்டுவந்து
புதைப்பார்கள்
அதைப் பின்னர்
எல்லோருக்கும் தெரிய
தோண்டி எடுப்பார்கள்
அதன்பின்னர் என்ன?
புதைபொருள் ஆராய்ச்சி மூலம்
இன்ன இடத்தில்
இத்தனையாம் நூற்றாண்டுக்குரிய
பழமை வாய்ந்த
............ சிலை
அகழ்ந்தெடுக்கப்பட்டதாக
அனைத்து ஊடகங்களுக்கும்
அறிவிப்பார்கள்
இதற்கடுத்த கட்டம் என்ன?
அந்த இடத்தில்
அந்தச் சிலை
பொற்சிலையாய் நிறுவப்படும்
ஓ!!!
எமது கிராமமொன்று
பொன்னகரமாய்
உருமாறிவிடும்.

**கன்னிமுத்து**
**வெல்லபதியான்**

# நீ மட்டும் தான்...



என்னை எனக்கு பிடிக்க வைத்த
இனிய படைப்பும் நீதான்
என் வாழ்க்கை எனும் புத்தகத்தை
புரட்டிப் பார்க்க என்
பக்கமாய் வந்து பாடம் சொன்னதும்_ நீதான்
படிக்காமலே பலருக்குப்
பாடம் புகட்டுகிறாய்
பலரும் பட்டம் பெற
பக்குவம் பண்ணுகிறாய்
பலருக்கும் பாடம் கற்பிக்க
கல்லூரி செல்லாமலே
கலை பயின்ற_ நல்
கலைஞனும்_ நீதான்
நீயோ படிக்காத மேதை
யார் சொன்னார் நீயிருந்தால்
பயம் பலதென்று
பைத்தியகாரர்கள்
நீ மட்டும்தான்
பலரும் பிரிந்தால்
பழகியோர் பிரிந்தாலும்
என் பக்கம் இணைகிறாய்
நீ மட்டுந்தான்
நிழலிலும் நிஜத்திலும்
பிரித்துப் பார்க்க மாறிய
மகா அளவுகோல்
நீமட்டுந்தான்
சம்மன் இல்லாமலும்
சமாதானம் கூறும்
சமாதான நீதவான்
நீ மட்டுந்தான்
சட்டம் படிக்காத நீதிபதி_ பிரிய
திட்டம் வகுக்காத பிரியன்
தனிமையே நீ
இப்போதும் எப்போதும்
என்னோடுதானே அதிகம்
இணையாக இருக்கிறாய்.

**புதுமைவாணன்**
**பாண்டிருப்பு**




## புறநானூற்றுத் தாய்
### பகுதி 1

1945 ஆம் ஆண்டு கலைஞர்.மு.கருணாநிதி அவர்கள் எழுதியது..

சுவைத்தபின் பகிர்ந்தவர்
சுல்தான் இப்ராஹிம்
Post Box 15429
00973 Manama, Bahrain

குடிசைதான் ஒரு புறத்தில்
சூரிய வேல்வாள்
வரிசையாய் அமைத்திருக்கும் -வையத்தைப்
பிடிப்பதற்கும் வெம்பகை முடிப்பதற்கும்
வடித்துவைத்த படைக்கலம் போல் மின்னும், மிளிரும்.....

புலியின் குகையினிலே அழகில்லை - புதுமையன்று
கிலியும் மெய் சிலிர்ப்பும்
கீழிறங்கும் தன்மையும் தலைகாட்டா
மானத்தின் உறைவிடம் - மறவன் மாளிகை..

இல்லத்து வாயிலிலே
கிண்ணத்துச் சோற்றோடு
வெல்லத்தைச் சிறிது கலந்து
வயிற்றுக்குள் வழியனுப்ப
பொக்கை வாய்தனைத் திறந்து
பிடியன்னம் எடுத்துப் போட்டாள்
பெருநரைக் கிழவி யொருத்தி

ஓடி வந்தான் ஒரு வீரன்
'ஒரு சேதி பாட்டி' என்றான்
ஆடிவந்த சிறுமிபோல்
பெருமூச்சு வாங்குகின்றாய்
ஆண் மகனா நீ தம்பி
மூச்சுக்கு மூச்சு இளைவேளை ஏற்படட்டும், பின்
பேச்சு தொடக்கம் செய் என்றாள் அந்த
கிண்டலுக்கு பேர்போன
கிழட்டுத் தமிழச்சி

வேடிக்கை நேரம் இதுவல்ல பாட்டி - உன்
வாடிக்கை கேலியை விட்டுவிடு.

' மடிந்தான் உன் மகன் களத்தில் '
என்றான் - மனம்
ஒடிந்து நிமிர்ந்தாள் தாய்க்கிழவி ஒருமுறை
தாயம் ஆடுகையில் காய்களை
வெட்டுவதுண்டு-களமும் அதுதான்.

'காயம் மார்பிலா முதுகிலா
கழருவாய் ' என்றாள் - ' முதுகில் ' என்றான்..
கிழவி துடித்தனள்,
இதயம் வெடித்தனள்.
வாளை எடுத்தனள்.

முழவு ஒலித்த திக்கை நோக்கி
முடுக்கினாள் வேகம்
கோழைக்குப் பால் கொடுத்தேன்
குப்புற வீழ்ந்து கிடக்கும்
மோழைக்குப் பெயர்
போர் வீரனாம்...

முன்பொருநாள்
பாய்ந்துவந்த ஈட்டிக்குப்
பதில் சொல்ல மார்பைக் காட்டிச்
சாய்ந்து கிடந்தார் என் சாகாத கண்ணாளர்.
அவருக்குப் பிறந்தானா?

அடடா மானமெங்கே - குட்டிச்
சுவருக்கும் கீழாக வீழ்ந்து பட்டான்.

இமய வரம்பினிலே வீரம் சிரிக்கும் - இங்கு
வீணை நரம்பினிலே இசை துடிக்கும்.
அதுவும் மானம் மானமென்றே ஒலிக்கும்

மதுவும், சுறாவும் உண்டு வாழும்
மானமற்ற வம்சமா நீ? - ஏடா
மரத் தமிழ்க் குடியிலே மாசு தூவி விட்டாய்
மார்பு கொடுத்தேன்
மகனாய் வளர்த்தேன்..

தின்று கொழுத்துத்
திமிர் பாய்ந்த தோள்களெங்கே ?
தினவெடுக்கவில்லையா? அந்தோ
வேலுக்கு வழி சொல்ல வகையற்ற
கோழையே- என் வீரப்
பாலுக்கு வழி சொல்வாய்
என்று கதறினாள்
எண்பதை நெருங்கிய ஏழைக் கிழவி..

சென்றங்குச் செரு முனையில்
சிதறிக் கிடந்த
செந்தமிழக் காளைகளைப்
புரட்டிப் பார்த்தாள் - அங்கு

நந்தமிழ் நாட்டைக் காக்க
ஓடிற்று ரத்த வெள்ளம்

பிணக்குவியலிலே பெருமூச்சு
வாங்க நடந்தாள்

மணப் பந்தலிலும் அந்த மகிழ்ச்சியில்லை
மகன் பிறந்த போதும் மகிழ்ச்சிக்கு எல்லையுண்டு

அவன் - இறந்து கிடந்தான் ஈட்டுக்கு மார்பு காட்டி
இதைக் கண்டாள் - இதயங் குளிர்ந்தாள்

'எதைக் கண்டாலும் இனிக் கவலை இல்லை
என் மகன் வீரனாய் இறந்தான்' என்றாள்..

அறுத்தெறிய இருந்தேன்
அவன் குடித்த மார்பை - அடடா !

கருத்தெரியப் பொய் சொன்ன கயவனெங்கே?
வாளிங்கே! அவன் நாக்கெங்கே?



# புத்தாண்டுச் சிந்தனைகள்

மூவினமும் இன்று மூச்சுவிடக் கிடைத்துள்ள
சந்தர்ப்பம் இதனைத் தவறவிடக்கூடாது

இத்தரையில் உள்ளவளம் எல்லாம் நிறைந்திருக்கும்
புத்தரையும், இயேசுவையும் புனித நபி அவர்களுடன்
சித்தர் குழாம் சூழ்ந்திருக்கும் சிவபெருமான் உட்பட
அத்தனை இந்துமத ஆண்டவர்கள் அனைவருமே

வந்திருக்கப்படுகின்ற மதங்கள் பல இருந்தும்
சிந்திக்க மாட்டாமல் சிலபேர் நடக்கின்றார்
தந்திரங்களை மீண்டும் தக்கவைக்கப் பார்க்கின்றார்
மந்திரத்தால் மாங்காய் விழ வைப்போம் என்கின்றார்

இலங்கையினை அனுமான் எரித்ததனால் மக்கள்
கலங்கியதைப் போன்றதொரு காலம் வரட்டுமெனக்
காவல் இருக்கின்றார் கல்லைவிட்டெறிவதற்கு
ஆவல் மிகக் கொண்டு ஆராய்ச்சி செய்கின்றார்

சிதைத்து அழித்துவிடத் திடசங்கர்ப்பம் கொண்டார்
இதற்கெல்லாம் இனியிங்கு இடமில்லை என்பதனைக்

காட்டுதற்கு நாங்கள் களத்தில் குதித்துள்ளோம்
நாட்டின் கல்விப்பயிருக்கு நாற்றுமேடை போடுகிற
வீட்டுக்கு வந்து வெளிச்சத்தை ஏற்றிவைத்து
பூட்டியதைத் திறந்து பூசை செய்ய முயல்கையிலே
ஆட்டிப் படைப்பதற்கு ஆள்விட்டுப் பார்க்கின்றார்
மூட்டைப் பூச்சிபோல் முதுகில் கடிக்கின்றார்
கூட்டுறாவாய்க் கல்விக்கொள்கை அடிப்படையில்
நீட்டும் கரம்பற்றும் நிலைப்பாட்டில் இருக்கையிலே

மாட்டிவிட்டு வேடிக்கை பார்த்து மகிழ்தற்கே
கேட்டுப்பிறந்தது போல் கிறுக்கப் பலர் இருக்கிறார்
எப்படியார் நினைத்தாலும் இழிமொழிகள் சொன்னாலும்
அப்படியாப்பட்டவரை அப்புறமாய் ஒதுக்கிவிட்டு
நம்வழியில் செல்வோம் நன்னோக்கம் மனங்கொள்வோம்
செம்மொழிக்கு நேர்ந்த சீரழிவை மாற்றுகின்ற
அத்தனை வழிகளையும் அச்சொட்டாய் அறிந்து வரும்
புத்தாண்டில் எண்ணத்தைப் புனர்நிர்மாணம் செய்வோம்

தானுண்டு வேலையுண்டு என்னும் தன்னலத்தோடு
ஏனென்றும் கேட்காமல் என்னவெனப் பார்க்காமல்
மீனுண்ட கொக்குப்போல் விக்குவதால் பயனுண்டோ
தேனுண்ட வண்டாகித் திருப்தியுற வேண்டாமா

ஆயிரம் மொழிநிலவும் அயல்நாட்டைப் பார்த்தேனும்
பேரகளைப்போலப் பேசிக்கொண்டிருக்கின்ற
இரண்டே மொழிபேசும் இலங்கையர்கள் திருந்தாரா
முரண்டு பிடிப்பதனால் ஏற்பட்ட முடிவைப்போல்

இனியும் வராமல் இருக்கவொரு வழிபார்ப்போம்
குனியும் நிலை ஏற்படுத்தும் கொள்கையினைத் தள்ளிவிட்டு

வேற்றுமைப் பெரிதாக்கி வெறுப்பை வளர்க்காமல்
நேற்று நடந்த நிகழ்ச்சிகளையே நினைத்து
சீற்றத்தின் பாற்பட்டு சிந்தனையைக் குழப்பாமல்
கூற்றுவனை மீண்டும் கூப்பிட்டுப் பார்க்காமல்
ஆற்றலுடன் எங்கள் அன்பைப் பயன்படுத்திக்
காற்று நுழையாத இதயங்களில் கூடத் தோற்றும் விதமாக
தோற்றும் படியாக ஏற்ற விதமாகக்

கருத்தை நுழைக்கின்ற கலையைப் பயன்படுத்தி
வருந்தியவர்கள் கூட வணங்கும் நிலைக்குள்ளாகி

உண்மை நிலையை உணர்த்தப் புறப்படுவோம்
அண்மையிலேயே நிச்சயம் எம் ஆசை நிறைவேறும்

கலகம் இனிவேண்டாம் கருத்தொற்றுமை வேண்டும்
விலகியிருக்காதீர் வெறுங்கனவு என்றுசொல்லிப்

பிதற்றித் திரியாதீர் பிரியமிகு சோதரரே
உதட்டினிலே ஒன்றும் உள்ளத்தில் வேறென்றும்

வைத்திருக்க வேண்டாம் வாய்திறந்து பேசுங்கள்
கைத்திருக்கும் காயும் கனியாகப் பழுக்குமொரு
காலம் வரும் இதில் கடுகளவும் ஐயமில்லை

அக்கரைச்சக்தி
15.12.2013



# வறுமைதான் சொந்தம்!

கல்லுக்கு மண் சொந்தம் சிலை வடிக்கும்
கலைஞனுக்கு ஆற்றல் சொந்தம் வயலில் விளைந்த
நெல்லுக்கு உமி சொந்தம் ஒளியைச் சிந்தும்
நிலவுக்கு வான் சொந்தம் மேகம் சொந்தம்
வில்லுக்கு நாண் சொந்தம் வீரர் கட்கு
வெற்றி சொந்தம் நன்றாக விளைச்சல் கண்ட
எள்ளுக்கு எண்ணெய் சொந்தம் கவிதை படைக்கும்
இணையில்லாக் கவிஞனுக்கோ வறுமை சொந்தம்

மண்ணுக்கு மரம், செடிகள், கொடிகள் சொந்தம்
மரத்துக்கு மலர் சொந்தம் கனிகள் சொந்தம்
விண்ணுக்கு மேகம், வெள்ளி, மின்னல் சொந்தம்
பெண்பித்துக் கொண்டவர்களுக்கு காமம் சொந்தம்
கண்ணுக்கு இமை சொந்தம் வாழை, பலாக்
கனிகளுக்கு இன்சுவையே என்றும் சொந்தம்
பண்ணுக்குப் பாடல் சொந்தம் பாடல் யாக்கும்
பாவலனுக் கிவ்வுலகில் வறுமைதான் சொந்தம்

பண வசதி கொண்டவர்க்கு கார், காணி, வீடு
பாரினிலே சொந்தமாகும் தென்றலிலே கலந்து
மணம் சிந்தும் மலருக்கு தேன்தானே சொந்தம்
மதிகெட்ட மூடருக்கோ மது சொந்தம்
தினமுடலை விற்கின்ற தாசியர்க்கு
நீசர் தரும் பணமொன்றே நாளும் சொந்தம்
மனத்தடியில் இருந்து எழும் சிந்தனையால்
பா யாக்கும் பாவலனுக்கோ வறுமைதான் சொந்தம்

உடலுக்கு உயிர் சொந்தம் பயிர்வ ளர்த்த
உழவனுக்கு விளைச்சலினால் செல்வம் சொந்தம்
கடலுக்குக் கரை சொந்தம் அலையும் சொந்தம்
கற்றோர்க்கு கல்வி சொந்தம் நடக்கவியலா
முடவனுக்கு நடைகொள்ள ஊன்றுகோல் சொந்தம்
முத்தமிழுக் கென்றுங்குன்றா இளமை சொந்தம்
இடர் தம்மைத் தொடர்ந்தாலும் துணிந்தே கவிதை
யாத்தளிக்கும் பாவலர்க்கோ வறுமைதான் சொந்தம்

கலாபூஷணம் குறிஞ்சிவாணன்
சாகாமம், திருக்கோவில்

# சுழலும் பூமியிலே..!

சுழல்கின்றது . . . பூமி . . மக்கள்
சுகமும் துக்கமும் . . . சேர்ந்து புரண்டெழுந்
துழலுகின்றனர் . . . வாழ்வில் . . .
சுழலுகின்றது . . . பூமி . . .
அகிலமீதிலே . . . மார்க்கம் . . . மிக
அதிகமுள்ளது . . . அறிந்து கொள்க நீ . . .
அனைத்தும் ஒன்றையே கூறும் . . .
அகில மீதிலே . . . மார்க்கம் . . .
உயர்ந்த தென்மதம் . . . என்று . . .
உளறு வோரது உண்மை அற்றதாம் . . .
உரைகள் கேட்பதே . . . தீது . . .
உயர்ந்த தென் மதம் . . . என்று . . .
உலகைப் படைத்தோர் . . . சக்தி . . . அதை . . .
எண்ணிக் கொண்டு நீ . . . இன்னல் பிறர்க்கு . . .
ஈதல் நல்லதோ . . . யோசி . . .
உலகைப் படைத்ததோர் . . . சக்தி . . .
இயற்கை மீதிலே . . . மனிதர் . . .
ஆட்சி புரிந்ததை . . . மாற்ற முனைவதால் . . .
அழிவு மட்டுமே . . . மிஞ்சும் . . .
இயற்கை மீதிலே . . . மனிதர் . . .
கடவுள் என்றொரு . . . அச்சம் . . . இது . . .
கண்டிப்பாகவே . . . இருந்து . . . ஆகணும் . . .
கள்ளச் சிந்தையர் . . . பேரில் . . .
கடவுள் என்றொரு . . . அச்சம் . . .
இயற்கைச் சமநிலை மீதில்
இடர்கள் பண்ணியே . . . குழப்பி வைப்பதை . . .
புதுமை என்பதும் . . . தவறு . . .
இயற்கைச் சமநிலை மீதில் . . .
அழியும் . . . அழியும் . . . இவ்வுலகே . . .
ஆக்கப்பட்டவை . . . அழிந்து போவதே
அன்னை இயற்கையின் நியதி . . .
அழியும் அழியுமிவ் வுலகே . . .

**முல்லைவீரக்குட்டி**

# நாடு நல்ல நாடு

நாடு நல்ல நாடு
நான் வாழும் இந்த நாடு
தேடும் செல்வம் என்னை
நாடும் நல்ல நாடு
புகழ மகிழ எங்கும்
புனித தலங்கள் உண்டு
கண்ணும் காணா மலர்கள்
காணும் தோட்டம் உண்டு
பண்ணும் இசையும் பாடும்
பாவலர்கள் கொண்ட
நாடு நாடு நாடு
நான் வாழும் இந்த நாடு
ஓடும் நதியும் உண்டு அதில்
ஓடும் ஓடம் உண்டு
பாடும் நதியும் உண்டு அதில்
பாடும் மீனும் உண்டு
காடும் மலையும் கொண்ட நல்ல
கனிய வளத்தைக் கொண்ட
நாடு நல்ல நாடு
நான் வாழும் இந்த நாடு
செந்நெல் கன்னல் வயல்கள் பனை
தெங்கு றப்பர் கொக்கோ
முத்து வைர மணிகள்
உதிர்ந்து கிடக்கும் இடங்கள்
சொத்தாய்க் காணும் நாடு என்
சொந்த ஈழநாடு
நாடு நல்ல நாடு
நான் வாழும் இந்த நாடு
தேடும் செல்வம் என்னை
நாடும் நல்ல நாடு

தம்பிலுவில் தயா

# கடத்துகின்றேன் !



புதுசுக்கு எல்லோரும் போகின்றார், யான் பழசே
சுதியாய்க் கிடக்கின்றேன்! "கவிதையும் பாட்டாக்கி
எழுதி வருகின்றேன்! ஈராயிரம் கடந்தே
பழுதாகித் துருப்பிடித்த பாட்டொன்றோ விட்டதனைப்
புதிதென்று போகின்றார்? 'போகாதே' என்றுரைக்கும்
அதிகாரம் எனக்கில்லை! இருந்தாலும் அது பிழையே!
புதிய பிறப்பாலே புகழ்தானே தமிழ்த்தாய்க்கு,
எதுவும் நற்பாட்டாக இருந்தால் நலந்தானே?
நாற்பாவாய் – ஐம்பாவாய் நல் ஆறு – ஏழெட்டென் (று)
ஏற்பட்டு விரிவுறுதல் எந்தமிழுக்குயர்வன்றோ?
ஆனால் வெறுஞ் சொல்லாய் – அமைகின்ற சொற்றொடராய்ப்
போனால் சில நாளுள் புதிசும் பழசுபடும்!
எனவே வரட்டும், நான் என் பழைய – புதுப்போக்கில்
கனமான பாட்டோடும் காலம் கடத்துகிறேன்!

தாமரைத்தீவான்
ஈச்சந்தீவு - கிண்ணியா

## எதைச் செய்கின்றாய்?

அன்னை வயிற்றில் கருவாகி
மழலை எனவே உருவாகி
உன்னை ஈன்றாள் புவிமீதே
உலகம் போற்ற வாழ்வதற்கு
அம்மா என்று அழுகின்றாய்
அழகாய் மண்ணில் வளர்கின்றாய்
சும்மா இங்கு இருந்துவிட்டு
சோர்ந்து மண்ணில் புகுகின்றாய்
எப்படியாவது வாழ்வோமென
தப்பாய் இங்கு வாழ்கின்றாய்
இப்படித்தான் வாழ்வதென
எப்போதாவது நினைத்தாயோ

நல்ல உலகைக் கெடுக்கின்றாய்
நாச உலகைப் படைக்கின்றாய்
குள்ள உயிரிலும் வேறாகி
கள்ள உடலாய் உருவாகி
காவியம் தன்னைப் புதைக்கின்றாய்
வரலாறு தன்னை வதைக்கின்றாய்
சாதிக்க எவ்வளவோ இருந்திருந்தும்
சாக்கடையில் நீ விழுகின்றாய்
பின்தொடரும் சமூதாயம்
பிழையாய் போகச் செய்கின்றாய்
உலகம் பழிக்க வாழ்கின்றாய்

கதிரவன்

## புதுமையின் பொங்கல் புதிய பாதையில்

பெரியதொரு நிசப்தம்
சலனமற்று நடக்கிறது
பொங்கிய எல்லாமே
புதுமையாக புதைந்து போய்விட்டது

சந்தோஷங்கள் மீண்டும் பொங்க
சனங்கள் வாழ்வு இங்கே தங்க
சக்கரை பொங்கல் பொங்க போகிறது

புரியாத எல்லாம் புரிந்து விட்டது
போதும் புது வாழ்வு வேண்டும்

வாழும் காலமதில் வன்முறைகள் அற்று
வாதங்கள் அற்று
வாழுவதே வேண்டும்

சந்தோஷங்கள் பொங்கி
சண்டைகள் மங்கி
சன்நிதியில் தங்கி
சமாதானமாக வாழ்வோம்

ஓர் மனிதனாக
ஓர் வாழ்கையில்
ஓர் இலட்சியத்துடன்
ஓர் அகிம்சையில்
ஒன்றைய் வாழ்வோம்

புதுமையான பொங்கல்
புரிய செய்யும்
சனங்கள் பொருத்தால்
பூமி நமக்கே

எஸ். திலகவதி
பதுளை

# குறுந்தொகைக் காட்சிகள் 1

எஸ். எதிர்மன்னசிங்கம்

சங்க இலக்கியங்கள் எனக் கருதப்படும் எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான குறுந்தொகையில் வரும் பாடல்கள் ஒவ்வொன்றும் நாடகம் ஒன்றில் வரும் காட்சிகள் போல் அமைந்துள்ளன. இவ்வாறான பாடல்கள் பலவற்றை நாம் குறுந்தொகையில் காணலாம். குறுந்தொகைப் பாடல்களின் சிறப்பினை நோக்குதற்கு நல்ல குறுந்தொகை என்னும் அடைமொழியினை இலக்கிய வரலாற்று ஆய்வாளர்கள் கூறியுள்ளனர். இனிப்பாடல் ஒன்றினைப் பார்க்கலாம்.

*முளிதயிர் பிசைந்த காந்தள் மென்விரல்*
*கழுவுறு கலிங்கங் கழாஅ துடீஇக்*
*குவளையுகள் கண் குய்ப் புகை கமழத்*
*தான்றுழர் துட்ட திடப்புளிப்பாக*
*இனிதெனத் கணவனுண்டலின்*
*நுண்ணிதின் மவிழ்ந்துன் றொண்ணுதன் முதனே*

இப்பாடலில் வரும் பிரதேசம் மருத நிலமாகும். இங்கு வாழ்கின்ற மக்கள் விவசாயத்தையும் கால்நடை வளர்ப்பையும் செய்பவர்கள். கணவனும், மனைவியும் சேர்ந்த ஒரு சிறிய குடும்பம். வறுமையிலும் செம்மையான அன்பான வாழ்க்கை வாழ்ந்தனர் என்பதையும் பாடல் உணர்த்துகின்றது. மனைவி கணவனுக்காக தயிர்க் குழம்பு சமைக்கின்றாள். வீட்டிலே உறைய வைத்த நல்ல கட்டித்தயிர் (முளிதயிர்) அதனைத் தன்னுடைய காந்தள் மலர்போன்ற விரல்களால் பிசைகின்றாள். அப்பொழுது அவள் கட்டியிருந்த சேலை நழுவுகிறது. (உரிகின்றது) அதனைத் தன் தயிர் பிசைந்த கைகளால் எடுத்துச் சொருகிக் கொண்டு பிசைந்தெடுத்து அடுப்பிலே வைத்து சமைக்கின்றாள். அப்போது அவளின் குவளை மலர் போன்ற கண்களில் அடுப்பில் இருந்து எழுகின்ற புகையானது சுற்றுகின்றது. அதனையும் பொருட்படுத்தாது தயிர்க்குழம்பை பதமாகச் சமைப்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கின்றாள். அப்படிச் செயற்பட்டு தான் சமைத்த தயிர்க்குழம்பைக் கணவனுக்குப் பரிமாறுகின்றாள். அப்போது கணவன் நன்றாக இருக்கின்றது. நன்றாக இருக்கின்றது என்று கூறிச் சுவைத்துச் சாப்பிடுகின்றான். அதனைப் பார்த்த மகிழ்ச்சியினால் நாணம் அடைந்தவளாக காணப்படுகின்றாள். இவ்வாறு அக்காட்சி அமைகின்றது. இதில் என்ன சிறப்பம்சம் எனின் தயிர் அப்பியுள்ள கைகளைத் தண்ணீரில் கழுவி விட்டு வந்து சேலையை எடுத்து அவள் கொடுக்கவில்லை. ஏனெனில் தாமதம் ஏற்பட்டால் தயிர் குழம்பு பதம் கெட்டுவிடும் மற்றும் கண்களிலே சுற்றியுள்ள புகைக்காக சற்றும் தாமதித்தாலும் பதம் சரிவராது என்பதை உணர்ந்து கணவனது மனம் சந்தோசமடைய வேண்டும் என்பதை மட்டுமே கருத்திற் கொண்டு செயற்படுவதைக் காணமுடிகின்றது. இவ்வாறு கணவன் மனைவி இருவரும் அன்பான வாழ்க்கை வாழ்ந்தனர் என்பதையே இக் குறுந்தொகைப் பாடல்கள் உணர்த்துகின்றது. இவ்வாறான பாடல்கள் குறுந்தொகையில் நிறையவே உண்டு.

எழுத்தாளர் ஊக்குவிப்பு மையத்தின் 2012, 2013 ஆண்டுகளுக்கான

# தமிழியல் விருது விழா



மட்டக்களப்பு மகஜனாக் கல்லூரி அரங்கில் 20.10.2013 அன்று கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறை முதுநிலை விரிவுரையாளர் திருமதி. ரூபிவலன்றினா பிரான்ஸிஸ் தலைமையில் நடைபெற்றது.

குறித்த தமிழியல் விழாவில் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி.எஸ்.எம்.சார்ள்ஸ்,மண்முனைமேற்குவலயக்கல்விப்பணிப்பாளர் கே.பாஸ்கரன், வவுனியா மாவட்ட வைத்தியசாலையின் வைத்திய நிபுனர் டாக்டர் பி.யோகானந், இந்தியாவின் தமிழ்நாட்டைசேர்ந்த வரலாற்று ஆய்வாளர் வைகிங முு.ச.கருணாநிதி, எழுத்தாளர் ஊக்குவிப்புமைய்யத்தின் மேலாளர் கலாநிதி ஓ.கே.குணநாதன் உட்பட எழுத்தளர்கள், ஆய்வாளர்கள், கலைஇலக்கியவாதிகள் எனபலரும்கலந்து கொண்டனர்.

இதன்போது எழுத்தாளர் ஊக்குவிப்புமைய ஸ்தாபகர் ஓ.கே. பாக்கியநாதன் உயர் தமிழியல்விருது மூத்தபடைப்பாளி இனிய அன்புமணி இராநாகலிங்கத்திற்கு வழங்கப்பட்டதுடன் தமிழ்ப்பணியாளர் தமிழியல் விருது வைகிங்மு.ச.கருணாநிதிக்கும் வழங்கப்பட்டது.

அத்தோடு பல்வேறு கலை இலக்கியம், ஓவியம் சிறந்த நூல் போன்றவைகளுக்கான விருதுகளும் பணமும் இதன்போது வழங்கப்பட்டன.

**இந்நிகழ்வில் சிறந்த கவிதை நூலுக்கான 2012,2013 ஆம் ஆண்டிற்கான தமிழியல் விருதுகள் முறையே "துயரம் சுமக்கும் தோழர்களாய்" கவிதை நூலுக்காக கவிஞர் குறிஞ்சிவாணன் அவர்களுக்கும்**

**"வல்லுவம்" கவிதை நூலுக்காக ஜின்னாஹ் சரிபுத்தீன் அவர்களுக்கும் வழங்கப்பட்டன.**




"வல்லுவம்" கவிதை நூலுக்காக ஜின்னாஹ் சரிபுத்தீன்

"துயரம் சுமக்கும் தோழர்களாய்" கவிதை நூலின் ஆசிரியர் கவிஞர் குறிஞ்சிவாணன்



# ஶ்ரீராம் விக்னேஷ்
## என கலையுலகில் அறியப்படும்
## திரு. சு. விக்னேஷ்வரன்
## அவர்களுடனான செவ்வி



**கே : தங்களது புலம் பற்றிய சிறிய அறிமுகம் ஒன்றைத் தாங்களேன்.**

வி : நான் ஈழமணித் திருநாட்டின் யாழ்மாவட்டத்தின் கட்டுவனில் பிறந்தேன். எனது வாழ்வு வவுனியாவிலே அமைந்தது. எனது கல்வியை வவுனியா தமிழ் மகா வித்தியாலயத்திலும், யாழ் மத்திய கல்லூரியிலும் பெற்றேன். பின்னர் 1988ற்குப் பின்னர் தமிழ்நாட்டின் திருநெல்வேலியிலே வாழ்ந்து வருகின்றேன்.

**கே. : தமிழிலக்கியத் துறையில் எவ்வகையான படைப்பிலக்கியங்களில் ஈடுபட்டுள்ளீர்கள்?**

வி : கவிதை அதிலும் அதிகபட்சமாக மரபுசார் கவிதைகள் ஆக்குதல் சிறுகதை, குறுநாவல், தொடர்கதை, நாடகம், மற்றும் வானொலி, நாடகம் எனத் தொடர்கிறது.

**கே : இலங்கையில் நீங்கள் வாழ்ந்த போது எவ்வகையான இலக்கிய முயற்சிகளை மேற்கொண்டீர்கள்?**

வி : கவியரங்குகளில் பங்குபற்றுவதே அப்போதைய பிரதான இலக்கிய வெளிப்பாடாக இருந்தது. அலய திருவிழாக்களில் மேடை ஏற்றுவதற்காக சில நாடகங்களையும் எழுதியிருக்கின்றேன். உலகத் தமிழர்களின் கவிதைத் தொகுதியான செம்மாங்கனியில் வன்னிநாடு எனும் தலைப்பில் எழுதியுள்ளேன். பின்னர் கிரகசியமணி கனக செந்திநாதன் நினைவுச் சிறுகதைப் போட்டியில் எனது “எட்டாம் திகதி” சிறுகதை ஆறுதல் பரிசு பெற்றது.

**கே :தமிழகத்தில் வாழ்க்கையை ஆரம்பித்த பின்னர் இலக்கிய முயற்சிக்கு கூடிய வளம் கிடைத்திருக்கும் அதுபற்றி குறிப்பிட முடியுமா?**

வி : ஆம் தமிழகம் வந்த பின்னர் தான் இலக்கியத் துறையில் சற்றுத் தலைதூக்க முடிந்தது. தமிழகத்திலும் அவ்வப்போது கவியரங்குகளில் பங்குகொண்டு வருகின்றேன். தமிழரசி சஞ்சிகையில் பொற்கிழிக் கவிஞர்கள் கவிதைப் போட்டியில் ஆறுதற் பரிசு கிடைத்திருக்கின்றது. குமரி முரசு பத்திரிகைகளிலும் என் கவிதைகள் வெளிவந்துள்ளன அத்துடன் ஆனந்த விகடன் நடத்திய சிறுகதைப் போட்டியில் (1991) எனது "ஒரு அரும்பு கிள்ளப்பட்டபோது" கதைக்கு ஆறுதல் பரிசு கிடைத்தது. மேலுமாக தின மலர் சிறுகதைப்போட்டியில் (1999) எனது "ஒரு பேனா பிரபஞ்சமானபோது" சிறகதை முதற் பரிசு பெற்றது.

**கே : நீங்கள் குறுநாவல்கள் அல்லது தொடர்கதைகள் நாடகங்கள் எழுதிய சந்தர்ப்பங்கள் எவை?**

வி : தினமலர் திருநெல்வேலிக் கிளையிக் பொறுப்பாளர்களாக இருந்த திரு. ரா வேங்கடபதி அவர்களின் வேண்டுகோளின்படி வாராந்தம் வெளிவரும் தினமலர். கதைமலருக்காக வாராந்தம் சிறுகதைகள் எழுதினேன். அந்தச் சந்தர்ப்பத்தில் தான் குறுநாவல்ளும் தொடர்கதையும் எழுத வாய்ப்புக் கிடைத்தது. புதிய விருப்பம் என்ற தலைப்பில் எழுதிய தொடர்கதை நான்கு மாதங்கள் வெளிவந்தது. மேலும் ஆல் இந்தியா ரேடியோ (திருநெல்வேலி வானொலி)யில் எனது இரண்டு சிறுகதைகள், இரண்டு நாடகங்கள் ஒலிபரப்பாகியுள்ளன.

**கே : நீங்கள் எழுதிய கவிதைகளில் உங்களுக்குப் பிடித்த கவிதை ஒன்றைக் கவிஞன் வாசகர்களுக்காகத் தர முடியுமா? அந்தக் கவிதை எழுதப்பட்ட பின்புலம் ஏதுமிருப்பினும் சொல்லுங்கள்**

வி : யாருடைய உதவியுமில்லாது வாழுகின்ற வறியவருக்காக அரசாங்கத்தால் வழங்கப்படுகின்ற "உபகாரச் சம்பளம்" எனப்படுவதை, "பிச்சைச் சம்பளம் " என்று சொல்லும் வழக்கம் இலங்கையில் இருந்தது.

கச்சேரி மூலம்சிறியதொரு தொகையாகக் கிடைக்கின்ற இப்பணத்தில்கூட, தமக்கென்று "கொமிசன்" வாங்குகின்ற அதிகாரிகளும் இருந்தனர்.

இந்தக் கொடுமையைக் கண்டு, மனதார நொந்து - நான் அப்போது எழுதிய கவிதை இது. மரபுக் கவிதையிலேயே மனம் பதித்துப் பழகிய நான், புதுக் கவிதையாக "முதன் முதலில்" எழுதிய கவிதையும் இதுதான். இக்கவிதை, 1982 ல் எழுதியது.

இது "தமிழக"த்திற்குப் பொருந்தாது. காரணம்: "பிச்சைச் சம்பளம்" என்ற வார்த்தையை இங்குள்ளோர் உபயோகிப்பதில்லை. அத்துடன், "கச்சேரி" என்றால், கிராமப் புறங்களில் இங்கு காவல் நிலையத்தைத்தான் சொல்வார்கள். அதனால், இது இத்தனை காலமும் - மனதுக்குள்ளே புதைந்து கிடந்து இப்போது உங்களுக்காக....

# பிச்சைக்காரன்



எச்சில் இலைக்கென நாம்
ஏங்கிநின்ற நாட்கள் போய்
"எங்களுக்கும் காலம் வரும்" எனும் துணிவில்,

கச்சேரி வேலை செய்யும்
கால்சட்டைக்கார ஐயா-உன்..
கருணை தனை வேண்டிநின்றோம்...!

உன் தயவால் -

"பிச்சைச்சம் பளம் பெற்று...
பிரச்சினைக்கு முடிவு பெற்று.....
"பிரஜைகளில் நாங்களுந்தான் ஒருவர்......"

என்ற -

உண்மை இறுமாப்பில்...
"உரிமைப் போராட்டம்" நடத்துவோம்,
உன்போன்று -
உயர்விடத்தில் இருப்போர்க்கு....
உதவிக் கரம்கொடுத்து,
"உறவுக்குக் கைகொடுப்போம்"
என்று -

பெருமையுடன் நினைத்தோம்....
பெரிதாக உனை மதித்தோம்....!

"பிச்சைச் சம்பள"த்தைப்,
பெற்றுத் திரும்புகையில்,
பெருநன்றி இதயத்தால் சொன்னோம்...!

நீயோ -
"சிறுகொமிசன்" தனைக்கேட்டு நின்றாய்.....!

இதயம் வலித்ததையா....
அதனை -
இறுக அழுத்தினோம்..!

அங்கே -
சிறிதும் நீயில்லை..
"சில்லறை"யாய் நொருங்கிவிட்டாய்....!

ஏன் ஐயா...!

உப்பிப்பெருத் துனது.
உடல்தூக்க முடியாமல்....
ஊர்ந்தூர்ந்து நடக்கின்ற நீ...!

எம்போன்றோர் -

"பிச்சைச்சம் பளத்திலேதான்
பெருத்தாயா...?

பிச்சைப் பணத்தினுக்கும்...
இச்சையுடன் ஏங்கும் நீ...
"பிச்சைக் காரன்"தான்...!

நம் -
பின்னாலே வந்துவிடு...!

கச்சேரி வேலையெல்லாம்.....
உனக்குக் -
கடைசிவரை நல்லதல்ல...!


"பஸ்நிலையம்" தான்
உனக்குப் "படியளக்கும்..! "

ஸ்ரீராம் விக்னேஷ்

# புதியதோர் உலகம் செய்வோம்

புதியதோர் உலகம் செய்வோம் - அதில்
புதுமைகள் கோடி காண்போம்
மதியினைக் கொண்டு மாந்தர் - தினம்
மகிழ்வுடன் வாழத்தக்க
புதியதோர் உலகம் செய்வோம்
நஞ்சினைக் கொண்ட பாம்பாய் - சிலர்
நாட்டிலே வாழ்ந்து கொண்டு
வஞ்சனை செய்து நாளும் - மக்கள்
வாழ்வினை நாசம் செய்யா
புதியதோர் உலகம் செய்வோம்
பணத்திலே மோகம் கொண்டு - நற்
குணத்தினை மாற்றி இன்று
பண்புகள் அனைத்தும் கெட்டு - வீண்
பழிகளில் வீழ்ந்திடாத
புதியதோர் உலகம் செய்வோம்
வெளிநாட்டு மோகம் கொண்டு - வெறும்
களியாட்ட வாழ்வில் மூழ்கி
கலாசாரம் தேய்பிறையாய் - மாறி
காண்பவர் தூற்றிடாத
புதியதோர் உலகம் செய்வோம்
வாக்குக்காய்ப் பொய்கள் கூறி - வெற்றி
வாய்த்தபின் போக்கை மாற்றும்
அரசியல் புல்லர் சூழ்ந்த - இந்த
அவனியை மாற்றி நாமும்
புதியதோர் உலகம் செய்வோம்

ஓசோனில் ஓட்டையிட்டு - வெய்யோன்
ஒளிக்கதிர் எம்மைத் தாக்க
நாசங்கள் பல புரிந்த - மாற்று
வேசங்கள் அற்றோர் வாழும்
புதியதோர் உலகம் செய்வோம்
சிறுவர்கள் உரிமை மீறல் - பள்ளிச்
சிறுமியர் வல்வுறவு
சண்டைகள் போதை சாதி - தினம்
கொண்டிருக்கும் தீயோரில்லா
புதியதோர் உலகம் செய்வோம்
மனிதர்கள நெஞ்சில் நாளும் - நல்ல
மனிதமே வளர்பிறையாய்
மனிதத்தை மட்டும் காக்கும் - புது
மனிதர்கள் வாழுகின்ற
புதியதோர் உலகம் செய்வோம்



ஆக்கம் : எஸ் பி. நாதன்
தம்பிலுவில்

# தர்மமே வெல்லும்...!

வீழ்வதும் எழுவதும்
வாழ்வியல் நியதி
வீழ்ந்தவர் எழுத்துணை
மனதினில் உறுதி
வீழ்ந்தவரெல்லாம்
கோழைகளில்லை
வீழ்த்திய யாவரும்
வீரருமில்லை
சத்தியநெறியோடு
சமரினைப் புரிந்தே
சித்தியடைந்தவர்
சிறந்த நல்வீரர்
குள்ள நரிகள்
கூட்ட மோரினம்
குருளையைச் சாய்க்கினும்
கோழைத்தனமே
சுத்த வீரன்
அபிமன்யுவை
சுற்றியடித்தவர்
சுத்தவீரரோ
உண்மை வீரம்
உறங்கும் ஒழியா
திண்ணம் ஓர்நாள்
திடங்கொண்டே எழும்
பாரதப் போரின்
படிப்பினைக் கண்டோர்
பாரினில் தர்மம்
படைத்திடும் வெற்றி

நிலாதமிழின்தாசன்


# உணர்ச்சி



நெஞ்சுக்குள் இருந்து கருவாகி
நினைவிற் கலந்து உருமாறி
பிஞ்சுப்பாதம் முடமாகி
பிறகும் கருவாய் உருவாகி
தொடரத் தொடரும் கவியால்
என்னைத் தூளாக்கும்
அதனை வெளியில்
மொழியில் தருதல் இயலாது
புரியும்
முழுதும் தெரியும்
எனினும் புச்சாகிக் கருகும்
பின்னர் கருவாய் வரும்
ஓர் கரைசலென . . .
இளகும் மனதைக்
குடையும் அதையே
உணர்வென்று
சிலபேர் சொல்வர்
சிலதே விளங்கிச் சிக்காக்கும்
புதிரே புரியா நிலையில்
எதனைப் புகல்வேனே

**கவிமணி**
**நீலாபாலன்**

# (இன் விக்டஸ்) Invictors



## வெல்லமுடியாதவன்

என்னைச் சுற்றி கரிய மேகங்கள்
கனத்த இருள் தொடரும் துன்பங்கள்
விதி என்னை எவ்வளவு வருத்தினாலும்
பரவாயில்லை
அந் அஞ்சா நெஞ்சத்தை எனக்கு அளித்த
இறைவனுக்கு நன்றி செலுத்துகிறேன்
கொடிய சூழ்நிலை குரூரமான பிறு என்னைக்
கவ்விப் பயமுறுத்துகின்றது ஆனாலும் நான்
பின்வாங்க மாட்டேன் கதறிப் புலம்பமாட்டேன்
தற்செயலாக வந்துள்ள இந்தக் கஸ்டத்தை
தைரியமாக ஏற்றுக் கொள்கின்றேன்
இது என் மனதைக் குழப்புகின்றது
ஆனாலும் நான் இதற்கு அடிபணிய மாட்டேன்
இந்த உள்ளக் கொதிப்புக்கும் கண்ணீருக்கும்
அப்பால் நடுக்கத்தின் நிழல் தெரிகின்றது
இத்தகைய மிரட்டல்களுக்கெல்லாம் நான்
பயந்ததில்லை இனியும் பயப்படமாட்டேன்
கொடுமையான ஆட்சிபீடம் எனக்கு எதிரிலேயே
இருக்கின்றது
கவலையில்லை எனக்குத் தரப்பட்ட
தண்டனைகளில்
பட்டியல் காட்டப்படுகின்றது கவலையில்லை
என் தலைவிதிக்கு நானே தலைவன்
என் ஆற்றல்களுக்கு நானே அரண்

இக்கவிதையினை எழுதிய இங்கிலாந்து நபரான வில்லியம் ஏர்டினஸ்ட் ஹென்லி (William Emest Henley) 12 வயதில் என்புருக்கி நோயால் பாதிக்கப்பட்டு காலினை வெட்டி எடுக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டு 25 ஆவது வயதில் கால் நீக்கப்பட்டது.

நன்றி :இணையம்

# மேசைக்கிறுக்கல்





விட்டு விட்டுத் துடிக்கும்
என் இதயத்தில்
விடாமல் துடிப்பது
உன் ஞாபகங்கள்

நான் நேசிப்பது
மலரையும் உன்
நட்பையும் மட்டுந்தான்
ஏன் என்றால்
மலருக்கு வாசம் அதிகம்
உன் மனசுக்கு பாசம் அதிகம்

விட்டு அவள் இந்த உலகத்தில்
விரும்பாத ஒன்றை – நான்
இன்னும் விரும்பிக்கொண்டே
இருக்கின்றேன்
அவள் மீதுள்ள – என் காதலை

உயிர் போகும் நேரத்தில்
உன் முகம் பார்த்து
உயிர் பிரிய நினைக்கும் உறவு
காதல்
ஆனால்
உயிர் போகும் நேரத்தில்
உயிர் கொடுத்து உயிர்காக்க
துடிக்கும் உறவு நட்பு

முள்ளுக்கு பயந்தால்
ரோஜாவை பறிக்க முடியாது
இரவுக்கு பயந்தால்
நிலவை ரசிக்க முடியாது
பேய்க்கு பயந்தால் – நீங்க
கண்ணாடி பார்க்க முடியுமா?

வலிக்கின்ற இதயமும்
வடிக்கிற கண்ணீரும் மாறும்
உண்மையான அன்பும்
உறுதியான நம்பிக்கையும் இருந்தால்.

அழ வைப்பதும்
அலைய வைப்பதும்
காதலின் செயல்
அன்பு செய்வதும்
ஆறுதல் சொல்வதும்
நட்பின் செயல்

இரவு பகலாகும் நிச்சயம்
ஆனால் நாளை நீ
இருப்பாய் என்பது.....

# கவிதைத் துளிகள்



## சிதைக்கின்ற சிற்பங்கள்

அன்று நீ பொழிவுடன்
இன்று நீ ......
உன்னாலே உருவான உன் வாழ்க்கையினை
உதறித் தள்ளிய உன் காதலன்
இடையே உறவின் அடையாளம் உன் மகவு
காலத்தின் கோலமென கதறி நீ வாடாதே
துண்டு நீ போகாதே நீ வாழ்ந்த
காலமோ மிகச் சொந்தம்
வார்த்தைகள் வரவில்லை வருடி உன்னை
அரவணைத்துத் தனிமையில் இருந்து நீ
வாழ்விதனை சிதைக்காதே
உன்னைப்போல் பலர் இந்தப் பாரினிலே
தோற்றது நீ பெற்று என்னதே பெண்ணே
காவியக் காதல்தான்
இன்று கரைபடர்ந்து போனது.

மகிந்தன், நீலாவணை

## காதலில் தோற்றவன்...

இன்றுவரை
ஒரு பெண்ணின் ஸ்பரிசத்தை
உணராதவன்தான் நான்
ஆனாலும் . . . எனக்கு
பெண்ணின் மென்மை தெரியும்
ஏனெனில் . . . .
சில தடவைகள்
காதலில் தோற்றவன் நான்

கல்லாறு சைத்தன்யா

## உன் நினைவில்

உன்னுடன் ஒரு வார்த்தை
பேசியதில்லை நேரில்
தினம் தினம் பேசுகிறேன்
உன் நினைவில்
உன் கைகோர்த்து
கன தூரம் சென்றதில்லை
உன் உயிர் கோர்த்து
என் உயிர் வரை செல்கிறேன்
இதயத்தில் ஒரு நொடி கூட
நான் இருப்பதாய் நினைக்கவில்லை
என் இதயத்தில் நீ
மொத்தமாய் இருப்பதால்

சாந்தி லோகேஸ்வரன்
அக்கரைப்பற்று – 7/4

## விபச்சாரம்

விலையில்லா
அங்கங்கள்
பொருந்திய
சரீரம் விற்கப்படும்
இடம்
விபச்சாரம்

ரஜிதரன்
ஆரையம்பதி

தமிழ் ஹைக்கூ கவிதைகள்

# வைரக் கோணர்

மு.முருகேஷ், தமிழ்நாடு

12

தலைமுறைக் கோபம்
அடிக்க அடிக்க
அதிரும் பறை
- கவிஞர் மித்ரா-

இலக்கு நோக்கி இயங்குவதே இலக்கியம் என்கிறோம். மொழியைக் கருவியாகக் கொண்டு எழுதப்படும் எந்த ஒரு படைப்புமே ஏதோ ஒரு நோக்கம் கருதியே படைக்கப்படுகின்றன.

மொழி என்பதே ஒருவரோடு ஒருவர் உரையாடுவதற்கான - பரிமாறிக் கொள்வதற்கான ஊடகம்தானே.

முகம்- கை - கால் வழிச் சைகைகளால், ஓசை ஒழுங்கற்ற வெறும் சத்தங்களால் மட்டுமே தகவல்களைப் பரிமாறிக் கொண்டிருந்தது ஆதிமனிதக் கூட்டம். பின் காலப்போக்கில், ஏதோவொரு ஓசைக்கு அதற்கான அர்த்தம் இதுதானெனப் புரிந்து கொண்டதும், சக மனிதனிடத்தில் அதே அர்த்தத்தைப் புரிந்து கொள்ளுமாறு செய்ததும் ஏதோ சில வருடங்களில் நிகழ்ந்துவிட்ட மாற்றமன்று.

பாறைகளிலும்,குகைகளிலும் ஆதிமனிதர்கள் தீட்டிய மனச் சித்திரங்களே எழுத்துக்களுக்கான முதல் காரணியாக அமைந்தன. பின்னர் அவை ஒரு ஒருங்கிணைந்த முறையில் தமிழ் எழுத்துக்களாக வரிவடிவம் பெற பல்லாயிரம் ஆண்டுகள் பிடித்தன.

அப்படியாய் உருவான ஒரு மக்கள் ஊடகமான மொழியை, சில இலக்கிய அறிவுஜீவிகள், சற்றும் புரியாத வகையில் எழுதிவிட்டு, " ஆகா...இதுதான் இலக்கியம்..." என்பது எப்படி பத்தாம் பசலித்தனமானதோ, அப்படியேதான் - தமிழில் புரியாத வகைக் கவிதைகளை நவீன கவிதைகளென பொய்யாய் சிலர் தூக்கி வைத்து ஆடுவதும், புரிகிற மாதிரி எழுதப்படும் எவ்வகைக் கவிதையாயினும்( மரபு, புதிது, ஹைக்கூ) அவை இலக்கியமேயல்ல என்பதான ஒதுக்குதல்களுமாகும்.

எது இலக்கியமென்பதை தீர்மானிக்கிற சக்தி காலத்திற்கு மட்டுமேயுண்டு. எந்த தனி மனிதனுக்கும் இதை தீர்மானிக்கிற தகுதியில்லை.இதை தமிழில் எழுதிக் கொண்டிருக்கும் சிலர் உணர்ந்து கொண்டதாகக் கூடத் தெரியவில்லை. ஒவ்வொரு இலக்கிய வகைக்கும் ஒரு சிறப்பிருப்பதைப் போலவே, தமிழில் எழுதப்படும் ஹைக்கூ கவிதைகளுக்கும் ஒரு சிறப்புண்டு.

உடனே, ஜப்பானிய ஹைக்கூக் கவிதைகளோடு அவசர அவசரமாய் ஒரு ஒப்பீடு செய்து, தமிழில் எழுதப்படுவதெல்லாம் ஹைக்கூவே அல்ல..என்பதைச் சொல்லவே ஒரு கூட்டமிருக்கிறது. அத்தகைய மனிதர்களிடம் நாம் வைக்கிற வேண்டுகோள் ஒன்றே ஒன்றுதான்.

முதலில், தமிழில் எழுதப்படும் ஹைக்கூ கவிதைகளை 'கண்' கொண்டுப் பாருங்கள். பிறகு, படியுங்கள். உங்கள் பார்வைக்கு வருகிற வெகுசன இதழ்களில் இடம்பெறும் ஓரிரு கவிதைகளைப் படித்துவிட்டோ, கையெழுத்திட்டு 'ஓசி'யாய் தரும் சில நூல்களை மட்டும் மேம்போக்காய்ப் புரட்டிவிட்டோ இப்படியான கருத்துக்களைப் பதிவு செய்து விடாதீர்கள். வரலாறு மட்டுமல்ல, காலமும் உங்களை மன்னிக்காது.

இதோ உங்களுக்கான பதிலாக, தமிழின் இரண்டாம் ஹைக்கூ நூலான கவிஞர் அறிவுமதியின் 'புல்லின் நுனியில் பனித்துளி' நூலில், கவிக்கோ அப்துல் ரகுமான் முன்னுரையாக எழுதியுள்ளார்.

" 'ஹைக்கூ' வைத் தமிழுக்குக் கொண்டு வருகிறபோது, அதன் எல்லா மரபுகளையும் தூக்கி கொண்டு வர வேண்டியதில்லை.ஜென் பார்வையில்தான் நாமும் இந்த உலகத்தைப் பார்த்தாக வேண்டும் என்று கட்டாயமிலலை.எந்தத் தத்துவப் பட்டையும் போட்டுக் கொள்ளாமல், எந்தக் கோட்பாட்டுக் கண்ணாடியும் அணிந்து கொள்ளாமல் படைப்பாளன் சுதந்திரமாக, நேராக இந்த உலகத்தைப் பார்க்கலாம். அப்போதுதான் வாழ்க்கையின் அறியாத பக்கங்களின் புதிய தரிசனங்களைக் காண முடியும்.அறிந்த ப்க்கங்களுக்கும் புதிய அர்த்தங்களைப் பெற முடியும். இத்தகைய சுய தரிசனம்தான் படைப்பாளன் என்ற தகுதியை நியாயப்படுத்தும். இரவல் தரிசனங்கள் அல்ல." ( நவம்பர்- 1984, பக்கம்-7)

இப்போது சொல்லுங்கள்... ஹைக்கூவில் சுய தரிசனம் தேவையா.தேவையில்லையா என்று...?

ஆணி அடித்த சுவரில்
மௌனமாய்ப் புத்தர்.
புன்னகை அருகில் பல்லி.
-அறிவுமதி-

விறகுவெட்டி! வேறு மரம் பார்
பொந்துக்குள்
கிளிக்குஞ்சு.
-அறிவுமதி-

இன்னும் (க)வரும்...

# கவிதை சில அவதானிப்புக்கள் 5

கவிமணி
நீலாபாலன்

ஆசியாக் கண்டம் போல் மிக அகன்ற பெருவெளி கவிதைப் படைப்பியல். எல்லோராலும் விரும்பப்படுகின்ற விரும்பி ரசிக்கப்படுகின்ற ஒரு இலக்கிய வடிவம் கவிதை.

ஒரு மொழியின் சிறப்பான, உன்னதமான உச்சங்களைத் தொடக்கூடிய வித்தகமும், வினைத்திறனும் மிகுந்தது கவிதை.

மானிடம் கண்டறிந்த எழுத்து வடிவிலான இசை கவிதை.

இன்று . . .

கவிதை பற்றிய அறிதலுக்கான அயர்வுகள், அரங்குகள், கருத்தாடல்கள், ஆய்வுகள், தேசத்தின் நாலா புறத்தும் முனைப்போடு செய்யப்பட்டு வருகின்றன.

கவிதை அகழ்ந்து கொண்டிருக்கும் திறனாளர்களை உணர்வாளர்களை விட கவிஞர்கள் அல்லாதோரே இந்த முயற்சிகளில் ஈடுபாடு காட்டி வருகிறார்கள். அறிமுகமில்லாத அறிமுகத்துக்கு வராத வடிவங்களை அமைப்பு முறைகளை எல்லாம் பற்றி வர்ண வெடி கொழுத்தி வீசுகிறார்கள் வீசிக்கொண்டிருக்கின்றார்கள்.

காலம் மாற்றங்களுக்குள்ளாவது புதுமைகளைக் கட்டவிழ்ப்பது ஆனாலும் கற்றறிதலின்றி எதையும் கைக்கொள்ள முடியாதல்லவா?...

ஒரு படைப்பு படைப்பிலக்கியத்தின் இலக்கியங்களையோ படைப்பு நுட்பங்களையோ ஆழமாகக் கொதுப்பிக்கொண்டு வெளிவரவேண்டும். ஒரு சமூகத்தின் எதிர்காலத்தை வடிவமைக்கும் படிவங்களை ஏந்திவரவேண்டும். மனிதனது புலனூடாகவும் அனுபவ நிகழ்வூடாகவும் வந்து மனங்களை கையகப்படுத்த வேண்டும். புற யதார்த்தங்களை மட்டுமல்ல அகயதார்த்தங்களையும் விரசமின்றி விளக்கமாகச் சொல்ல வரவேண்டும்.

இன்று கவிதை செய்து கொண்டிருக்கின்ற மிகப்பலருக்கு கவிதை பற்றிய அறிதலில்லை. அப்படியான அறிதல் இருந்தாலும் அகழ்வதற்கான ஆற்றல்கள் குறைவு. அவர் எழுதுவதுபோல இவரும் இவர் எழுதுவது போல அவரும் கவிதைகளை எழுதிக்கொண்டிருப்பதால் தனித்துவங்களை தனித்துவமான கவிதைகளைத் தரிசிக்க முடியவில்லை. அவையெல்லாம் கவிதையாக்கவும் இல்லை.

கவிதை உணர்வால் இரண்டு மொழியோடு கலந்து ஆற்றலாளனால் வரையப்படுகின்ற அப்பழுக்கற்ற சித்திரம்.
அறிவியலுக்காக கலை அகழ்வியலில்லை.
அழகியலுக்காகவும் அது இல்லை.

நிகழ்வுகளால் உரசப்பட்டு நினைவுகளால் சேமிக்கப்பட்டு உணர்வுகாக ஊற்றெடுக்கப் படுவதை மொழி வனைகின்றது.
ஒரு அப்பத்தைச் சுட்டு இறக்கி அதன் ஆவி பறப்பதற்கு முன் அடுத்த அப்பத்திற்கு அடுக்குப் பண்ணுகின்ற அவசரத்தில் கவிஞனானவர்கள் காணாமல் போய்க்கொண்டிருக்கிறார்கள். அவசரத்தில் கருத்தரித்து அது இது எல்லாவற்றையும் சேர்த்து அள்ளிக் குழைத்து புது மொழி அறிமுகம் நடாத்துகின்ற வேகமாக விற்பனையாளர்களால் கவிதையினுடைய வீரியம் அரை குறை உயிர்ப்போடு மரணித்துப் போகிறது.

கவிதையின் உயிர்ப்பு அதன் பாசையில்லை. கவிதையின் வீரியம் அது உடுத்தி வருகிற கதைப் பாணியிலுமில்லை. கதை வேறு கவிதை வேறு. புரிதலில்லாமல் சில பேர் வெகுதூரம் போய்விட்டார்கள். இவர்கள் போன பாதையில் பலபேர் போக விளைகிறார்கள். எதுவும் புதிதாக இருந்தால் எவரும் வரவேற்பது பின்னர் அதனுள் புதைந்து போவது இயல்புதான். இப்படியான வருகைகளால் சக்தியிழந்து போவது நமது இருப்பு, உயிர்ப்பு.இது பற்றிச் சிந்திப்பதில் யாரும் அக்கறை கொள்வதில்லை. எல்லா இறக்குமதிச் சிந்தனையையும் உள்வாங்கி எமது நிலைப்பாடு தளம்பாமல் புதிதாக அமைக்க முயலலாம். அது தவறல்ல . . . ஆனால் நாம் முதுசொம் முழுவதையும் தூக்கி எறிந்துவிட்டு புதிது புதிதாய் முளைக்க முயற்சிப்பது தவறல்லவா? வார்த்தைச் சோடனை செய்து ஆங்காங்கே மணச் சவர்க்காரம் போட்டுத் தேய்த்துக் கழுவி அத்தர், சென்ட் கவிதையை ஆக்க முடியாது.

உணரத் தகுந்தவர்களின் இதயத்தத விசில் ஒரு கணமெனினும் விளையாடி விளையாடி, படிப்பவர்களை சிந்தனை மயப்படுத்தி அல்லது உணர்வு மயப்படுத்தி அல்லது உணர்வுமயப்படுத்தி அவர்களைக் கட்டிப்போடும் வல்லமை கொண்ட ஒரு மொழி வரைவு கவிதை.

கவிதை கலைகளின் அரசி என்றார் கல்வியலாளர் மார்க் ஸ்ரீயி. கற்றவர்களின் வினைத்திறனும் அகலித்த சிந்தனையும் கவிதையை இன்னுமொரு தளத்திற்கு இட்டுச்செல்லும் சாதிக்கவேண்டும் என்ற வெறி வேட்கை உந்துதல் ஒவ்வொரு படைப்பாளனுக்கும் இருக்கவேண்டும். ஒவ்வொரு இலக்கியப் படைப்பும் சாதனைகளின் வெளிப்பாடே.

இன்றைய சமூகச் சூழல் பற்றிய அறிதல் அதற்கவசியம். இலக்கியம், படைப்பு என்பது கற்பனை கொய்தெடுத்த கனியாகவிருந்தாலும் அதன்

உள்ளீட்டுப் பூச்சுக்களெல்லாம் வாழ்வியற் துகள்களாக ஜொலிக்க வேண்டும். மானிட அசைவியக்கமற்ற எந்தக் கலைப்படைப்புகளுக்கும் உயிர் இருக்காது வாழ்வை அடியொற்றி வரும் எழுத்துக்களே வரலாறு படைக்கும்.

ஆயிரம் மொழிகள் ஆங்கிலம் போலப் பரந்தும் இலக்கியங்களைச் சுரந்தும் இருந்தாலும் கவிதைக்குரிய மொழியென்று அறிவியலாளர்கள் அறிமுகப்படுத்துவது தமிழும் கிரேக்கமும் அதிலும் கவிதை என்று வந்தால் தமிழையே உலக மொழி என்பர் மொழியியலாளர்கள். ஏனெனில் அந்த மொழிகளில் உரை நடை இலக்கியங்கள் தோன்றிய பின்னரே கவிதை இலக்கியம் அரும்பின. ஆனால் தமிழ் மொழியில் கவிதை தோன்றிய பின்னரே உரைநடை இலக்கியங்கள் பிறந்தன.


தமிழின் முதல் மூச்சு கவிதையே. இந்த உண்மையை எங்களது கவிதையாளர்கள் ஆய்ந்தறியாமல் எவர் எவரையோ எது எதையோ சமர்த்துகளென்று நிரூபிக்க எண்பிக்க ஆலாய்ப்பறக்கின்றார்கள். இதற்குக் காரணம் அறியாமை. கற்றலே இல்லாத அறியாமை. தமிழ்க் கவிதை வீச்சுக்கள் பற்றி அறியும் வேட்கையல்ல வினையாற்றலுமில்லை. யாரோ சொன்னதை எவரோ எழுதியதை படித்து அதேபோல தமது எழுத்துக்களையும் சாயம்பூசி வெளிப்படுத்தும் முயறிகளிலேயே இன்றையக் கவிஞர்கள் ஈடுபாடு காட்டுகின்றனர்.

புரியாத இதுவரை தெரிந்து கொள்ளாத எதையும் புரிந்துகொள்ளத் துடிக்கின்ற ஆர்வம் எல்லோரிடமும் உண்டு. அந்த ஆசீர்வாதத்திற்கு தீனிபோடும் சிந்தனை அகழ்வு அவசியமானது.

கொள்கைகளுக்காகவன்றி மனிதனின் முழுஇயலையும் இலக்கியமாகப் பதிவு செய்வது இன்றையக் கவிஞர்களது கடமை புதுமை என்ற பெயரில் வெறும் தகரடப்பாவாக இலக்கியத்தைத் தட்டிக் கொண்டு அசுத்தப்படுத்தாமல் தங்கப் பரல்களாக நல்ல கவிதைச் சமர்த்துக்களை அகழ்ந்து தரவேண்டும். தேடலாக தேட்டமாகக் கவிதையைப் பதியமிட ஒவ்வொரு கவிஞனும் முயலவேண்டும்.

*இன்னும் . . . . இது பற்றித் தேடுவோம் . . .*

---



# கவிஞனைக் கேளுங்கள்


பாரதிதாசன்

? *அனிதன்,தம்பிலுவில்*

**கவிஞர் பாரதிதாசனின் இயற்பெயர் என்ன?**

**சுப்புரத்தினம்**

? *கனகராஜா - பதுளை*

**கவிஞர் தேசிக விநாயகம்பிள்ளை பற்றிச் சுருக்கமாக கூறமுடியுமா?**

**தேசிக விநாயகம் பிள்ளை (ஆகஸ்ட் 27, 1876 - செப்டம்பர் 26, 1954) 20 நூற்றாண்டில் வாழ்ந்த ஒரு புகழ் பெற்ற கவிஞர். பக்திப் பாடல்கள், இலக்கியம் பற்றிய பாடல்கள், வரலாற்று நோக்குடைய கவிதைகள், குழந்தைப் பாடல்கள், இயற்கைப் பாட்டுக்கள், வாழ்வியல் போராட்ட கவிதைகள், சமூகப் பாட்டுக்கள், தேசியப் பாட்டுக்கள், வாழ்த்துப் பாக்கள், கையறு நிலைக் கவிதைகள், பல்சுவைப் பாக்கள்... என விரிந்த தளத்தில் செயல்பட்டவர்.**

**பெற்றோர்: சிவதானுப்பிள்ளை, ஆதிலட்சுமி**

**எட்வின் ஆர்னால்டின் 'ஆசிய ஜோதி' யைத் தமிழில் தழுவி எழுதினார். பாரசீகக் கவிஞர் உமர் கய்யாம் பாடல்களைத் தழுவி தமிழில் எழுதினார்**

## எழுதிய நூல்கள்

**ஆசிய ஜோதி , (1941)**
**மலரும் மாலையும், (1938)**
**மருமக்கள்வழி மான்மியம், (1942)**
**கதர் பிறந்த கதை, (1947)**
**உமார் கய்யாம் பாடல்கள், (1945)**
**தேவியின் கீர்த்தனங்கள்**
**குழந்தைச்செல்வம்**
**கவிமணியின் உரைமணிகள்**

## சிந்தையில் தடம் பதித்த சிந்ராக்குச் சில வரிகள்...

சிந்ரா, உன்கவிவரிகள் - என்னைச்
சிந்திக்கத் தூண்டினவே
கவிஞன் இதழ் இருபத்து நான்கினிலே
கருத்தூன்றி நீ வரைந்த
உருவகக் கவி வரிகள் - நெஞ்சை
உலுப்பியே விட்டதையா

‘என்தாயும் நானும்’ என
இலகு நடைத் தலைப்பினிலே
ஆழ்கருத்துப் பொதித்து
ஆய்ந்து நீ வடித்த கவி
பொருள் விளங்கிப் படிப்போரின்
புத்தியைக் கிளறுமையா

அம்மாவாய் இருந்திருந்தால்
ஆதாரந் தனைப் புதைத்து
பின் வந்த பித்தனுக்கு
முன்னுரிமை வழங்குவாளா?
தாயின் தோல் போர்த்த
தரங்கெட்ட பேய் அது

முட்டையை அவனுண்ண
முன்பிறந்த உந்தனுக்கு
பட்டினிச் சோறூட்டும்
பாதகத்தி தாயுருவில்
திட்டமிட் டழித்திடவே
திடங்கொண் டுருவெடுத்தாள்

பேச்சுக்குத் தடைபோட்ட
பேடித்தாய் உனது கை
வீச்சுக்குத் தடைபோட்டு
விலங்கிட்ட செய்திகளை
மூச்சுக்கு மூச்சு நீ
முன்வைத்த முறை கண்டேன்

நாவிலே தேன்தடவி
நஞ்சூட்டப் பார்த்ததுவும்
உயிர் இறுக்கம் கொண்ட
ஒப்பந்தம் செய்ததுவும்
புத்தகத்தை எரித்து நித்தமுனை வாட்டியதும்
நெஞ்சுருக்கம் செய்யுதையா


தாயவளின் கொடுமையெலாம்
தயைவுடனே நீ ஏற்று
சேயெனவே வாழ்வோமெனும்
சிந்தையுடன் சென்றாலும்
பேயெனவே உனைப்பிடிக்கும்
பித்தலாட்டத் தாய்க்கெதிராய்
பரசுராமன் வேடங் கொண்டால்
பாவமில்லை பாரினிலே

இயந்திரத் தாயவளின்
இதயமிலாத் தீர்ப்புக்களால்
ஒரு சிந்ரா வாடவில்லை
ஓராயிரம் சிந்ராக்கள்
சிந்தை நொந்து உடல்வாடிச்
சிதறுண்டு வேறாகி
அமைதி இழந்த விதம்
ஆழ்மனதில் பதித்திட்ட
சிந்ரா உந்தனுக்கு
சிரம் தாழ்ந்த நன்றி

திருமதி
ஜெகதீஸ்வரி
நாதன்

# நூலங்காடி

## உங்கள் நுகர்வுக்காய் எங்கள் பகிர்வு




நூல்: என் பேனாவின் நிதர்சனம்

வகை : கவிதை


ஆசிரியர் : சமரபாகு சீனா உதயகுமார்

முதற்பதிப்பு : செப்ரெம்பர் 2013

ஆசிரியர் முகவரி: கூனந்தோட்டம்,
சமரபாகு,
வல்வெட்டித்துறை

தொ.இல : 078 3015144

விலை : ரூ.200.00




நூல் : நட்சத்திரக் கனவுகள்

வகை : கவிதை

ஆசிரியர் : எஸ் ரபீக்

முதற்பதிப்பு: பங்குனி 2013

வெளியிட்டோர்: சரா பப்லிகேஷன்,
145,பட்டியடிப்பிட்டி
அக்கரைப்பற்று

தொ.இல : 067 2278623

விலை : ரூ.200.00


Aathithya Digitals
மட்டுமா நகரில்
துரிதமான சேவை
துல்லியமான வேலை
வெனர்கள், விளம்பரப் பலகைகள்,
ஸ்ரிக்கர்கள், canvas paper printing,
wide format photo printing
MEANING OF CREATION...
AATHITHYA
ஆதித்யா
Digitals
DIGITAL PRINTING
065 2223134
077 1988531
258/B TRINCO ROAD, BATTICALOA
e -mail : aathithyadb@gmail.com
வணசிங்கா பிரிண்டர்ஸ், மட்டக்களப்பு. 065 222 7170